1971 டிசம்பர் 16]

தமிழ்நாட்டில் ரொட்டித் தொழிற்சாலை

* 466 வினா—திரு. மா. பா. சாரதி : மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் அரசுத் துறையில் ரொட்டி செய்யும் தொழிற்சாலை நிறுவப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அது லாபகரமாக இயங்குகின்றதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) மாடர்ன் பேக்கரிஸ் (இந்தியா) லிமிடெட் நிறுவனத்தால் ரொட்டித் தொழிற்சாலை ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இது பொதுத்துறையில் இந்திய அரசு ஏற்படுத்தியுள்ள நிறுவனமாகும்.

(இ) இத்தொழிற்சாலை மாநில அரசு அதிகார வரம்பின் கீழ் இல்லாத காரணத்தால் இத்தகவல் கொடுக்கப்படவில்லை.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, are the Government aware that the starting of such mass bread-producing factories have resulted in the closure of small bread-producing factories and the consequent unemployment?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இது மத்திய அரசால் துவக்கப்பட்ட ஒரு தொழிற்சாலை. சிறிய ரொட்டித் தொழிற்சாலை இதனால் பாதிக்கப்படுகிறது என்று சொல்வது பொருத்தமானதல்ல. இந்தத் தொழிற்சாலையே முழு அளவில் வேலை செய்யவில்லை. இந்தத் தொழிற்சாலை கூட நஷ்டத்தில்தான் வேலை செய்து கொண்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது.

தமிழ்நாட்டில் நில உச்சவரம்பு

* 467 வினா—திரு. என் சிட்டப்பா : மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நில உச்சவரம்பை மேலும் குறைக்க வேண்டும் என்று டில்லியில் நடந்த முதலமைச்சர்கள் மாநாட்டுத் துணைக்குழு தமிழ்நாடு அரசிடம் வற்புறுத்தியதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நிலச்சீர்திருத்தம் குறித்து 1970 செப்டம்பரில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில், நிலவுடைமை மேல் வரம்புச் சட்டம் தொடர்பான பிரச்சினைகள் அனைத்தும் மத்திய நிலச்சீர்திருத்தக் குழுவின் ஆலோசனைக்கு விடவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. குழுவின் கூட்டம் 16-4-1971, 3-8-1971 ஆகிய நாட்களில் நடைபெற்றது. இக்குழு, பிற பரிவுரைகளுடன் பின் வரும் பரிவுரைகளை அளித்துள்ளது. அவையாவன : ஐந்து பேர் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு நிலவுடமை மேல் வரம்பு, ஆண்டு முழுவதும் பாசன வசதிபெற்ற நிலமெனில், அல்லது, ஆண்டுக்கு இருபோகம் விளையக்கூடிய பாசன வசதிபெற்ற நிலமெனில் 10 முதல் 18 எக்கர்களுக்குள் வரையறுக்கப்படலாம்; புன்செய் நிலங்களைப் பொறுத்த வரையில்